செ. வெ. எண் : 453　　　　　　　　　　நாள் : 15.07.2011.

# செய்திக் குறிப்பு

மாண்புமிகு சமூக நலம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை அமைச்சர் திருமதி செல்வி இராமஜெயம் அவர்கள் சென்னைக்கு அருகாமையில் உள்ள முட்டுக்காட்டில் இயங்கி வரும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தினை 15.7.2011 அன்று பார்வையிட்டார்கள். அவ்வமயம் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் அரசுச் செயலாளர் திருமதி கண்ணகி பாக்கியநாதன், இ.ஆ.ப., மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் திரு. ப.ரா. சம்பத், இ.ஆ.ப., மேற்படி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் நீரதா சந்திரமோகன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

இந்த நிறுவனத்தில் பல்வேறு வகையான மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசமாக பயிற்சியும் மற்றும் உபகரணங்களும் வழங்கப்படுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். குறிப்பாக, கண்பார்வையற்ற, மனவளர்ச்சிக் குன்றிய, மற்றும் காதுகேளாதோர்களுக்கான ஆரம்ப பயிற்சி மையங்களையும், மூளை முடக்கு வாதத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனவளர்ச்சிக் குன்றிய மாணவர்கள் மற்றும் குழந்தைகளுக்காக நடத்தப்படுகின்ற பயிற்சி வகுப்புகள் போன்றவற்றையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

மாற்றுத் திறனாளிகளின் உபயோகத்திற்கான உபகரணங்கள் செய்யும் இடங்களையும் மற்றும் அவர்களுடைய பெற்றோர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

மேற்கண்ட நிறுவனத்தினைப் போல தமிழகத்தில் பிற மாவட்டங்களிலும் இதுபோன்ற மையங்களை நிறுவினால் மாற்றுத் திறனாளிகளுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள்.

PRSampath
15.7.11

மாற்றுத் திறனாளிகளுக்கான
மாநில ஆணையர்
15/1, மாதிரிப் பள்ளி சாலை
ஆயிரம் விளக்கு, சென்னை-600006.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9